# நவம்பர் – 05 – பொதுக்கால 31ம் ஞாயிறு

**“அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்ட மாட்டார்கள்”**
**மத் 23:3**

## முதல் வாசகம் : மலாக்கி 1 : 14 --- 2 : 2, 8 - 10

”இப்பொழுது, குருக்களே! உங்களுக்கு நான் தரும் கட்டளை இதுவே : என் பெயருக்கு மாட்சி அளிக்கவேண்டும் என்பதை உங்கள் இதயத்தில் பதித்துக் கொள்ளுங்கள். எனக்கு நீங்கள் செவிகொடுக்காவிடில் உங்கள் மேல் சாபத்தை அனுப்புவேன். உங்களுக்குரிய நல்லாசிகளைச் சாபமாக மாற்றுவேன். ஆம், இக்கட்டளைக்கு உங்கள் இதயத்தில் இடமளிக்காததால் ஏற்கனவே அவற்றைச் சாபமாக மாற்றிவிட்டேன்” என்று படைகளின் ஆண்டவர் சொல்கிறார். நீங்களோ நெறி தவறி நடந்தீர்கள். உங்கள் போதனையால் பலரை இடறி விழச் செய்தீர்கள். லேவியோடு நான் செய்த உடன்படிக்கையைப் பாழாக்கிவிட்டீர்கள்.” என்று சொல்கிறார் படைகளின் ஆண்டவர். ”ஆதலால் நானும் உங்களை மக்கள் அனைவர் முன்னிலையிலும் இழிவுக்கும் தாழ்வுக்கும் ஆளாக்குவேன் ஏனெனில், நீங்கள் என் வழிகளைப் பின்பற்றி ஒழுகவில்லை. உங்கள் போதனையில் ஓரவஞ்சனை காட்டினீர்கள்.” நம் அனைவர்க்கும் தந்தை ஒருவரன்றோ? நம்மைப் படைத்தவர் ஒரே கடவுளன்றோ? பின்னர் ஏன் நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கைத் துரோகம் செய்கின்றோம்? நம் மூதாதையரின் உடன்படிக்கையை ஏன் களங்கப்படுத்துகிறோம்?

**பதில்பாடல் :** என் நெஞ்சம் அமைதியுற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்

## இரண்டாம் வாசகம் : 1 தெசலோனி 2 : 7 – 8,13

சகோதர சகோதரிகளே, நாங்கள் உங்களிடையே இருந்தபொழுது, தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதுபோல், கனிவுடன் நடந்து கொண்டோம். இவ்வாறு உங்கள் மீது ஏக்க முள்ளவர்களாய், கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்றி, எங்களையே உங்களுக்குக் கொடுத்துவிட ஆவலாய் இருந்தோம் ஏனெனில் நீங்கள் எங்கள் அன்புக்குரியவர்கள் ஆகிவிட்டீர்கள். கடவுளின் வார்த்தையை நீங்கள் எங்களிடமிருந்து கேட்டபோது அதை மனித வார்த்தையாக அல்ல, கடவுளின் வார்த்தையாகவே ஏற்றுக் கொண்டீர்கள். இதற்காக நாங்கள் கடவுளுக்கு இடைவிடாது நன்றி கூறுகிறோம். உண்மையாகவே அது கடவுளுடைய வார்த்தைதான். அதுவே நம்பிக்கை கொண்ட உங்களில் செயலாற்றுகிறது.

## நற்செய்தி : மத்தேயு 23 : 1 - 12

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது.: “மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்டமாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகல மாக்குகிறார்கள் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்கு கிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்பு கின்றார்கள். சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்பு கிறார்கள். 8 ஆனால் நீங்கள் ”ரபி” என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள். இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர். உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்“ என்றார்.

**தியானம்:** யேசு மனித அவதாரம் எடுத்ததன் முக்கிய நோக்கமே பாவிகள் மனம் மாறி நல் வாழ்வு வாழ வேண்டும் என்பதே. அவர் இவ்வுலகில் வாழ்ந்த போது ஏழைகளின் தோழனாக, நோயுற்றவர்களுக்கு வைத்தியராக, நலிந்தோரின் தேற்றரவாளனாக, பாவிகளின் அடைக்கலமாக, பரிசேயருக்கு எதிரியாக, அதிகாரம் ஆணவம் நிறைந்தோரின் அடக்கு முறையாளனாக பார்க்கப் பட்டார். ஓய்வு நாளில் குணப்படுத்தியதால், பாவிகளுடன் பந்தி அமர்ந்ததால், உண்டு குடித்ததால் அவர் விமர்சிக்கப் பட்டார். அவர் பல்வேறு வடிவங்களில் பார்க்கப் பட்டாலும், அவரது நோக்கம் ஒன்றாகவே இருந்தது. தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர் நிலைத்து நின்றார். அதில் இருந்து இம்மியளவும் அவர் விலகவில்லை. தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டித்தார், அறிவுரை சொல்ல வேண்டிய இடத்தில் புத்திமதி கூறினார், நாடி வந்தோரின் தேவைகளை சந்தித்தார், பாவிகளை மன்னித்தார், அடக்குமுறையாளரின் ஆணவத்தை அடக்கினார், பரிசேயரின் குதர்க்கமான கேள்விகளுக்கு வார்த்தையால் பதிலடி கொடுத்தார். நீதியை நிலை நாட்டினார். எவ்வாறு அவர் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினாரோ அவ்வாறே கடவுளின் விருப்பப்படி வாழ நம்மையும் அழைக்கிறார். நாம் எவ்வாறு வாழ்கிறோம்? நாம் எமது விருப்பப்படிதான் பல தடவைகள் வாழ்ந்து இறைவனை விட்டு பிரிந்து செல்கிறோம். அதனால்தான் நாம் பலவகையான இன்னல்களை அனுபவிக்க நேரிடுகிறது. நாம் சந்திக்கும் பலவகையான நோய்களுக்கும், வேதனைகளுக்கும் நாமே காரணமாக இருந்துவிடுகிறோம். எனவே கடவுளின் குரலுக்கு செவிமடுத்து அவரின் அழைப்பிற்கு ஏற்ப எமது வாழ்வையும் மாற்றி அமைப்போம்.